

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், அண்ணா நகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் உடலுக்கு நேற்று சென்னை அமைந்தகரையில் உள்ள அவரது இல்லத்தில் மலர்மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர்கள் ந.இராமலிங்கம், ச.பரமசிவம் ஆகியோர் உள்ளனர்.

கொள்கையில் உறுதியையும் - களப்பணியையும் - அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக்காட்டியவர் சோ.மா.இராமச்சந்திரன்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, நவ.1-

அண்ணாநகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சோ.மா.இராமச்சந்திரன் (வயது 101) அவர்கள் நேற்று முன்தினம் இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

அச்செய்தியில் கழகத் தலைவர் அவர்கள், கொள்கையில் உறுதியையும், களப்பணியில் அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக் காட்டியவர் சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நூறாண்டுகளைக் கடந்து வாழ்ந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் மறைவெய்திய செய்தி மிகுந்த துயரமளிக்கிறது.



எளிய தேநீர்க் கடை நடத்தி, தமது கடின உழைப்பால் உயர்ந்து, திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்தவர். மிசா சிறைவாசம் கண்டவர். 30 ஆண்டுகள் பகுதிச் செயலாளராகவும், ஒருமுறை அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். கொள்கையில் உறுதியையும் களப்பணியில் அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக் காட்டியவர். அவரது நெடிய கழகப் பணியைப் போற்றும் வகையில், கடந்த ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் அவருக்குக் கலைஞர் விருது வழங்கிச் சிறப்பித்தோம்.

கடந்த ஆண்டு அவரது இல்லத்திற்கே நேரில் சென்று, நூறாவது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தபோது அவர் காட்டிய அன்பும் மகிழ்ச்சியும் இன்றும் என் நெஞ்சில் நிறைந்திருக்கின்றன.

கழகத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த அவரது நெடிய பொதுவாழ்வு இன்று நிறைவுற்றிருக்கிறது. அவர் விட்டுச் சென்ற கொள்கைத் தடமும் தொண்டறமும் என்றும் நமக்கு வழிகாட்டும்!

சோ.மா.இராமச்சந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தூத்துக்குடி வடக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் த.வெ.க. அரசைக் கண்டித்து சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் அருகில் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் தலைமையில் மாநில மகளிர் பிரச்சாரக் குழுச் செயலாளர் ஜெசி பொன்ராணி, வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி தொண்டரணி அணி அமைப்பாளர்கள் கவிதா தேவி, ராமலட்சுமி, தெற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி தொண்டரணி அணி அமைப்பாளர்கள் சாரதா பொன் இசக்கி, தயாநிதி ஆகியோர் முன்னிலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



விழுப்புரம் மத்திய, தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் விழுப்புரம், புதிய பேருந்து நிலையம் அருகில், நகராட்சி திடலில் த.வெ.க அரசைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஏ.ஜி.செல்வி தலைமையில் கே.அமுதா வரவேற்புரையில் எம்.தேன்மொழி, ஷா.பெனாசிர் ஷாநவாஸ், சீத்தாபதி சொக்கலிங்கம் ஆகியோர் கண்டன உரையாற்றினர். வி.திலகவதி நன்றிவுரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்டக் கழக பொறுப்பாளர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, செஞ்சி.கே.எஸ்.மஸ்தான், தி.கௌதம் எம்.எல்.ஏ., Dr.R.மாசிலாமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, ம.ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



வேலூர் அண்ணா கலையரங்கம் அருகாமையில், தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில், கையாலாகாத த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் கண்டன உரையுடன், தலைமை கழகப் பிரதிநிதி, டாக்டர் மாலதி அவர்களுடன் தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் நடைபெற்றது, இதில் மாவட்ட மகளிர் துணை செயலாளர், மாநில மகளிரணி பிரச்சாரக் குழு செயலாளர், மாநகராட்சி மேயர்சுஜாதா,மாநில மருத்துவ அணி துணை செயலாளர், மாநகர கழக மகளிர் துணை செயலாளர், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்க் கழக மகளிர் அணி,மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



நிர்வாகத் திறனற்ற த.வெ.க ஆட்சியின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து, ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தெற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் அஸ்வினி செந்தில்குமார், வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கலா சுந்தரமூர்த்தி ஆகியோர் தலைமையிலும், தெற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராதிகா சக்கரபாணி, வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அன்பு அன்பரசு ஆகியோர் முன்னிலையிலும் கள்ளக்குறிச்சி மந்தைவெளியில் நடைபெற்றது, இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, மாநில கல்வியாளர் அணி இணைச் செயலாளர் மருத்துவர் மலர்விழி ஆகியோர் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பி எதிர்ப்பைப் பதிவு செய்தனர், இக்கூட்டத்தில், மகளிரணியினர், மகளிர் தொண்டரணியினர், கழக மகளிர் நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் மகளிர் பிரதிநிதிகள், கழக மகளிர் தொண்டர்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம், சேர்ந்தமரம் கிளைச் செயலாளர் பி.முருகன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :31.10.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு!

காரைக்குடி போக்குவரத்துக் கழக தொ.மு.ச நிர்வாகிகளான எம்.பச்சமால் மற்றும் வி.முருகன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :31.10.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.